தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், திருப்பூரில் 30 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அதேபோல், திண்டுக்கல் மாவட்டம் சத்திரப்பட்டியில் 20 மி.மீட்டரும், கொடைக்கானல், கழுகுமலை ஆகிய இடங்களில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. கடந்த சில நாள்களாக, தென் மாவட்டங் களில் கோடைக்கு முன்னரே வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் திங்கள்கிழமை அதிகபட்சமாக மதுரையில் 97.34 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது என்றார் அவர்.

## விவசாயியின் வயல்வெளியில் 7100 கிலோ மக்காச்சோளம்விற்பனை

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டாரத்திலுள்ள எம்.களத்தூர் கிராமத்தில் விவசாயி நிலத்தில் அறுவடை செய்யப்பட்டிருந்த மக்காச்சோளம் அப்பகுதியிலேயே விற்பனை செய்யப்பட்டு, உரியத் தொகை விவசாயிக்கு வழங்கப்பட்டது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக, விவசாயிகள் ஆர்வலர் குழுவினரால் எம்.களத்தூர் கிராமத்தில் திங்கள்கிழமை விவசாயி கே.குமார் தன்னுடைய நிலத்தில் அறுவடை செய்து வைத்திருந்த 7100

கிலோ மக்காச்சோளத்தை வயல்வெளியிலேயே வளையப்பட்டியைச் சேர்ந்த வியாபாரி செந்தில்குமாருக்கு விற்பனை செய்தார். கிலோ ரூ.12-க்கு என்ற அளவில் விற்பனையான மக்காச்சோளத்துக்குரிய தொகையான ரூ. 85,200 உடனடியாக வழங்கப்பட்டது. இந்த நேரடி வியாபாரி -விவசாயி விற்பனை பரிமாற்றத்துக்கு வேளாண் வணிகத் துறையின் வேளாண் உதவி அலுவலர் தொட்டியம் சரவணக்குமார், முசிறி வேளாண்மை அலுவலர் புஷ்பாசிவகுமார், ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். எம்.களத்தூர் கிராமத்தில் அமைக்கப்பட்ட விவசாயிகள் ஆர்வலர் குழு அமைக்கப்பட்டு, குழு மூலம் முதன்முறையாக வயல்வெளி யில் நேரடியாக மக்காச்சோளம் விற்பனை செய்யப்பட்டுள்ளது நல்ல பலனைத் தந்துள்ளது என்று திருச்சி வேளாண் வணிகத் துணை இயக்குநர் இரா.சந்திரசேகரன் தெரிவித்தார்.

## கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

நாகப்பட்டினம், வடக்குப்பொய்கைநல்லூரில் கோமாரி நோய் தடுப்பூசி பணியை மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் ஞாயிற்றுக் கிழமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் திட்டம் 6 மாதங்களுக்கு ஒருமுறை அதாவது, மார்ச் 1 மற்றும் செப். 1 ஆகிய நாள்களில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை கோமாரி நோய் 7 சுற்று தடுப்பூசிப் பணிகள் இலவசமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. தற்போது 8-வது சுற்று தடுப்பூசிப் பணிகள் மார்ச் 1 முதல் மார்ச் 21 வரை இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2,72,000 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூரி இலவசமாக போடப்பட உள்ளன. கோமாரி நோய் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்த நோயால் இறப்புகள் குறைவாக இருந்தாலும் கறவைமாடுகளில் பால் உற்பத்தி குறைவு,

எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவைமாடுகளில் சினைப்பிடிப்பு தடைபடுவது உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனால் கால்நடை வளர்ப்போர் இந்த முகாமை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஜெயபால். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, ஆட்சியர் சு. பழனிசாமி பேசியது: மாவட்டத்தில் இதுவரை 2,600 பயனாளிகளுக்கு ரூ. 10 கோடியில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல், 18,320 பயனாளிகளுக்கு ரூ. 24 கோடியில் விலையில்லா வெள்ளாடுகள் என ஆக கூடுதலாக ரூ. 34 கோடியில் கால்நடை பராமாOப்புத் துறையின் சார்பில் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார். நிகழ்ச்சியில் ஊராட்சித் தலைவர் ர. மகேந்திரராஜா, வெளிப்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் க.குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 120 பேருக்கு தென்னை மரம் ஏறும் கருவிகள் அளிப்பு

வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த 18 பெண்கள் உள்பட 120 பேருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தென்னை மரம் ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டு, மரம் ஏறும் கருவிகள் இலவசமாக திங்கள்கிழமை வழங்கப்பட்டன. தேத்தாக்குடி வடக்கு, தாணிக் கோட்டகம், புஷ்பவனம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், கொச்சி தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் தென்னை பராமரிப்பு குறித்த 6 நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இத்துடன், தென்னை மரம் ஏறுவதற்கென வடிவமைக்கப்பட்ட கருவியை பயன்படுத்தி மரம் ஏறுவது குறித்து 120 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களுக்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் இலவசமாக கருவிகள், சான்றிதழ் அளிக்கப் பட்டன. தோப்புத்துறை அம்மன் திருமண அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் டி.வி. ராஜன் தலைமை வகித்தார். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதுநிலை

இயக்குநர் வி. செல்வம், சென்னை தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர் டி.என். சுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர் என்.சேகர் ஆகியோர் முன்னிலை வகித்து கருவிகள், சான்றிதழ், பரிசுகளை அளித்தனர். நிகழ்ச்சியில், ஊராட்சித் தலைவர் ஆர். கிரிதரன், வணிகர் சங்கத் தலைவர் ஆர்.முருகையன்,விவசாயிகள் சங்கச் செயலாளர் ஒளிச்சந்திரன்,சுவாமிநாதன் நிறுவன ஆய்வாளர் ஆனந்த், ஒருங்கிணைப் பாளர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி

சிதம்பரம் அருகே உள்ள சி.முட்லூர் அரசு கலைக் கல்லூரியில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி குழுமம், கல்லூரி ஆசிரியர்களுக்கான குறுந்திட்ட ஆராய்ச்சியின் கீழ், மீன்பிடிக் கழிவிலிருந்து மண்புழு உரம் தயாரிப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமுக்கு கல்லூரி முதல்வர் க.வணங்காமுடி தலைமை வகித்தார். திட்ட ஆய்வாளர் த.கோவிந்தன் மீனவப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மீன்பிடி கழிவுகளின் முக்கியத்துவம், அதிலிருந்து மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் தாவர வளர்ச்சியில் இதன் பயன்பாடுகள் குறித்து பயிற்சி அளித்தார். முகாமில் கல்லூரி துறைத் தலைவர்கள் வீ.தங்கமணி (விலங்கியல்), ச.லோகராஜன் (ஆங்கிலம்), க.காந்தியப்பன் (தாவரவியல்), நா.ரவி (கணினியியல்) மற்றும் கல்லூரி ஆராய்ச்சிக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

## கர்நாடகத்தில் 4 நாள்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு

கர்நாடகத்தில் அடுத்த 4 நாள்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை வானிலை மையத்தின் இயக்குநர் பி.புட்டண்ணா செய்தியாளர்களிடம் கூறியது: பெங்களூரில் சனிக்கிழமை மழை பெய்துள்ளது எதிர்பாராதது. கடந்தாண்டும் இதே

காலக் கட்டத்தில் பெங்களூரில் மழை பெய்தது. வானிலை மாற்றத்தால் மழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது. தென்கோடியில் கடல் மட்டத்திலிருந்து 0.9மீட்டர் அளவுக்கு புயல் காற்று சுழன்று வருகிறது. இது கிழக்கு நோக்கி வீசும். இந்தக் காற்று கிழக்கிலிருந்து மேற்கில் குறைந்த அழுத்த தாழ்வுமண்டலமாக மாறியுள்ளதால் தமிழகம், கேரளம், தெற்கு மற்றும் மத்திய கர்நாடகத்தில் மழை பெய்துள்ளது. வட இந்தியாவில் நிலை கொண்டுள்ள புயல் காற்று மேற்கு நோக்கி வீசுவதாலும், வட கர்நாடகத்தில் மழை பொழிகிறது. இன்னும் ஒருசில நாள்களில் கடலோர கர்நாடகம், பெங்களூரில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 4 நாள்களுக்கு கர்நாடகத்தில் பரவலாக இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இதனால் தட்பவெப்பமும் குறையும். கடந்த பிப்.28-ஆம் தேதியுடன் குளிர்காலம் முடிவடைந்துள்ளது. மார்ச் 1-ஆம் தேதி முதல் கோடை காலம் தொடங்கியுள்ளது என்றார். பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை 0.1 மி.மீட்டர் மழை பதிவானது. பெங்களூரில் தட்பவெப்பம் அதிகபட்சமாக 35 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்சமாக 21 டிகிரி செல்சியஸ். அடுத்த 24 மணி நேரத்தில் பெங்களூரில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

**<u>சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கான மானியத்தை அதிகரிக்க வேண்டும்</u>**

தமிழகத்துக்கு வழங்கப்பட்டு வரும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கான மானியத் தொகையை மத்திய அரசு அதிகரிக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் கே.ஆர்.அர்ஜுனன் வலியுறுத்தினார். இதுதொடர்பாக மாநிலங்களவையில் சிறப்பு கவன ஈர்ப்பு நேரத்தின் போது அவர் திங்கள்கிழமை பேசியதாவது: "தமிழக அரசின் நீர் மேலாண்மை மூலம் குறுவை சாகுபடி விளைச்சல் அதிகரித்துள்ளது. மேலும், இத்திட்டங்களுக்காக 70,000 குளங்கள்,

மாநிலம் முழுவதும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தேக்கி வைக்கப் படும் நீர் நெல், கரும்பு சாகுபடிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. இந்தியாவிலேயே முதல் முறையாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பயன்படுத்துமாறு விவசாயிகளை ஊக்கப்படுத்தியது தமிழக அரசுதான். இத்திட்டம் நல்ல பலனை அளித்ததால், மத்திய அரசு 2011-12-ஆம் ஆண்டு முதல் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கி வருகிறது. தமிழகத்தில் நீடித்துவரும் தண்ணீர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையை அதிகரிக்க வேண்டும். மேலும், அனைவருக்கும் அந்த மானியம் கிடைக்க மத்திய அரசு வழிவகை செய்ய வேண்டும். இதேபோல பயறு வகை சாகுபடி விவசாயிகளுக்கு சிறப்பு நிதியுதவி கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

## முள்ளங்கனாவிளையில்நாளை கால்நடை மருத்துவ முகாம்

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்பட்ட முள்ளங்கனாவிளை ஊராட்சியில் புதன்கிழமை(மார்ச் 4) கால்நடைமருத்துவ முகாம் நடைபெறுகிறது. கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரிநோய் பரவாமல் தடுக்க கால்நடை பராமரிப்புதுறையினர் முகாம்கள் அமைத்தல், நோய் தடுப்பூசி போடுதல், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் விநியோகம் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இதையொட்டி, முள்ளங்கனாவிளை ஊராட்சிப் பகுதிகளான காட்டுவிளை பகுதியில் புதன்கிழமை காலை 7 முதல் 9 மணி வரையிலும், தாறாதட்டு பகுதியில் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரையிலும் கோமாரி நோய்க்கான மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இம் முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கிள்ளியூர் வட்டார கால்நடை மருத்துவர் சஜன் தெரிவித்துள்ளார்.

## வீரிய ரக நாட்டுக்கோழிக் குஞ்சுகள் விற்பனை

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வீரிய ரக நாட்டுக்கோழிக் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுதொடர்பாக திருநெல் வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்தமிழகத்தில் இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் நாட்டுக்கோழி வளர்ப்பது லாபகரமான தொழிலாக உள்ளது. ஆனால், கோழிக்குஞ்சுகளை வாங்குவதற்கு சரியான குஞ்சு பொரிப்பகங்கள் இல்லாததால் பண்ணையாளர்கள் நம் மாநிலத்தின் மேற்கு மாவட்டங் களான நாமக்கல், கோவை, திருப்பூர் மாவட்டங்களையே சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்தக் குறையைப் போக்கும் வகையில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் தமிழ்நாடு அரசின் பகுதி 2 திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சு பொரிப்பகம் ரூ.35 லட்சத்தில் தொடங்கப்பட்டு இம் மாதம் முதல் செயல்பட தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பண்ணையாளர்களுக்கு குறைந்த விலையில் தரமான கோழிக்குஞ்சுகளை கிடைக்கச்செய்வது மட்டுமன்றி லாபகரமான தீவிர முறை நாட்டுக்கோழி வளர்ப்புக்குத் தேவையான அறிவியல் ரீதியான ஆலோசனைகளையும் வழங்குவதாகும். கோழிக்குஞ்சு பொரிப்பகத்தில் இருந்து வாரம்தோறும் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட உள்ளது. கோழிப்பண்ணையாளர்கள் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சு களைப் பெற அதற்கான பணத்தைச் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளுதல் அவசியமாகும். இதுகுறித்த விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிற்றுவிக்கும் கால்நடைப் பண்ணை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி என்ற முகவரியை அணுகலாம். மேலும், 0462-2337309

என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**93 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் அறிகுறி**

கும்மிடிப்பூண்டி: தமிழகம் முழுவதும், 93 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் அறிகுறி இருப்பதாக, கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தெரிவித்தார். கும்மிடிப்பூண்டி அடுத்த, மாதர்பாக்கம் அருகே உள்ள அமரன்பேடு கிராமத்தில், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர், டாக்டர் சங்கரசுப்ரமணியம் தலைமையில், கோமாரி நோய் தடுப்பு முகாம் நடைபெற்றது. மண்டல துணை இயக்குனர் பாத்திமா, உதவி இயக்குனர் கோபிகிருஷ்ணா ஆகியோர் மேற்பார்வை யில் முகாம் நடைபெற்றது. முகாமில், 256 மாடுகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாமில், இணை இயக்குனர் பேசுகையில், 'தமிழகம் முழுவதும், 93 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் அறிகுறி இருப்பது தெரியவந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், 2.70 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் அறிகுறி உள்ளன. அதனால், மாவட்ட அளவில், 76 குழுக்கள் நியமித்து, மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம் அமைத்து, 21 நாட்களில், கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும்' என, தெரிவித்தார்.

**ரூ.1.05 கோடி மதிப்பிலான வேளாண் பொருட்கள் ஏலம்**

அந்தியூர்: அந்தியூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி, பர்கூர் உட்பட அந்தியூர் பகுதியில் இருந்து, தேங்காய், எள், நிலக்கடலை,

மக்காச்சோளம், பாசிப்பயிறு, துவரை, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகிய விளைபொருட்களை, விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில், 30 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 4.50 ரூபாய்க்கும், அதிகவிலையாக, 15.50 ரூபாய் என, 2.75 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 90 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 77.76 முதல் 92.71 ரூபாய் வரை, 2.50 லட்சம் ரூபாய்க்கும், எள், 20 மூட்டைகள் கிலோ ஒன்றுக்கு, 60.69 முதல், 71.19 ரூபாய் என. ஒரு லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 20 மூட்டைகள் கிலோ ஒன்று, 12.29 முதல், 12.71 ரூபாய் வரை, 26 ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது. கடந்த, புதன்கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 600 மூட்டைகள் கொண்டு வரப்பட்டது. பச்சை கிலோ, 23.50 முதல், 29.59 வரையும், காய்ந்தது, 40.11 முதல், 50 ரூபாய் வரை, 9.20 லட்சம் ரூபாய்க்கும், ஆமணக்கு, 10 மூட்டை, கிலோ ஒன்று, 35.26 முதல், 52.59 ரூபாய் வரை, 25 ஆயிரம் ரூபாய்க்கும், பச்சைப்பயிறு, ஆறு மூட்டைகள், 63.86 முதல், 75.89 ரூபாய் வரை, 20 ஆயிரத்துக்கும், நாளிப்பயறு, 20 மூட்டைகள், 51.56 முதல் அதிகபட்சமாக, 54.46 ரூபாய் வரை, 50 ஆயிரத்துக்கும், துவரை, 200 மூட்டைகள் குறைந்த விலையாக, 58.10, அதிகப்பட்ச விலையாக, 62.10 ரூபாய்க்கும் விற்பனையாகி, 12 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த, வியாழக்கிழமை நடந்த பருத்தி ஏலத்துக்கு, பிடி ரக பருத்தி, 5,500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, குறைந்த விலையாக கிலோ, 40 முதல், 44.50 ரூபாய் வரை, 76 லட்சத்துக்கு விற்பனையானது. நேற்றைய ஏலத்தில் மொத்தம், ஒரு கோடியே, நான்கு லட்சத்து, 58 ஆயிரம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெறிவித்தார்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் முழுவீச்சில் நடந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில், எட்டாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி, ஊட்டி அருகேயுள்ள நஞ்சநாடு ஊராட்சி, குருத்துக்குளி கிராமத்தில் துவங்கியது. மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து கூறுகையில்,""மாவட்டத்தில், 42 ஆயிரத்து 929 பசு மாடுகள், 2,071 எருமை மாடுகள் என, 45 ஆயிரம் கால்நடைகளுக்கு, 26 மருத்துவ குழுவினர் இணைந்து கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட உள்ளனர். கால்நடை பராமரிப்புத் துறை, "ஆவின்' நிறுவனமும் இணைந்து இப்பணிகளை செய்து வருகின்றன.இப்பணி, வரும் 21ம் தேதி வரை நடைபெறும்; விடுபட்ட கால்நடைகளுக்கு, 22ம் தேதி முதல், 31ம் தேதி வரை தடுப்பூசி போடப்படும். அனைத்து கால்நடைகளின் நோய் எதிர்ப்பு Œக்தியை கண்டறிவதற்காக கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுவதற்கு முன், பின், கால்நடைகளின் ரத்தம் வேலூர் ராணிபேட்டை நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு ஆய்வுக்கு அனுப்பப்படும்.முகாமில, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் மனோகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## பேச்சிப்பாறை அணையில் கூடுதல் தண்ணீர் வெளியேற்றம்

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே சாரல்மழை பெய்து வருகிறது. இதனால் தண்ணீரின் தேவை குறைந்துள்ளதால் பெருஞ்சாணி அணை மூட்டப்பட்டுள்ளது. நேற்று மாவட்டத்தில் எங்கும் மழை பதிவாகாத நிலையில் பேச்சிப்பாறை அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது வினாடிக்கு 453 கன அடி தண்ணீர்

வெளியேற்றப்பட்டு வருகிறது. பேச்சிப்பாறை அணையின் நேற்றைய நீர்மட்டம் 27.60 அடியாக இருந்தது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 61.10 அடியாக உள்ளது.

**வேளாண் உதவிசெயற் பொறியாளர் தகவல் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் திட்டத்தில் தடுப்பணை**

திருச்சி: ""ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தில், 3.32 கோடி ரூபாய் மதிப்பில், திருச்சி மாவட்டத்தில் தடுப்பாணைகள் கட்டப்பட்டு உள்ளன," என, வேளாண் உதவிசெயற் பொறியாளர் பிரசாத், தெரிவித்தார். திருச்சி மாவட்டத்தில், பல்வேறு காரணங்களால், நிலவளம் குறைந்து, தரிசு நிலங்களாக மாறி வருகிறது. இவற்றை விளை நிலங்களாக மாற்றவும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், நிலம் சமன்படுத்தல், சம உயர வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர், அமுக்கு குட்டை, பண்ணக்குட்டை, கசிவுநீர் குட்டை, தடுப்பணைகள், கால்நடை குட்டை, வரத்து கால்வாய் போன்றவை அமைக்கப்படும். ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாறுதல், குடிநீர் ஆதாரமேம்பாடு, வேளாண் காடுகள், பழமரக் கன்றுகள், தீவனப்பயிர் வளர்த்தல் போன்ற பணிகள், பயனாளிகளின், ஐந்து சதவீத பங்குத் தொகையுடன் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, புள்ளம்பாடி, துறையூர், மருங்காபுரி, தொட்டியம், வையம்பட்டி, முசிறி, தா.பேட்டை, மணப்பாறை மற்றும் உப்பிலியாபுரம், ஆகிய ஒன்பது வட்டாரங்களில் தடுப்பணைகள், பண்ணைக்குட்டை, கசிவுநீர் குட்டை போன்ற குடிநீர் ஆதார மேம்பாட்டு பணிகள், 136 நிர்வடிப்பகுதிகளில், 3.32 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர்வடிப்பகுதியில் உள்ள ஓடைகள், மழை வெள்ளத்தால் சிதைந்து மண் அரிமானம் ஏற்படுவதோடு, மழை நீரினால் மண் அரித்து செல்லப்பட்டு, நீர் ஆதாரங்களில் படிந்து

கொள்ளளவைக் குறைக்கிறது. ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதன் மூலம், மண் அரிமானம் தடுக்கப்படுவதுடன், மழைநீர் ஓடையில் சேமித்து, நிலத்தடி நீர்மட்டம் மேம்பட உதவுகிறது. இதற்காக, கிடாரம் நீர்வடிப்பகுதியில், மூன்று இடங்களில் தடுப்பணைகள், 3.75 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு உள்ளன என, வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

## பயிர்களுக்கு இன்சூரன்ஸ் விவசாயிகள் மகிழ்ச்சி

குஜிலியம்பாறை : வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் தொகை வீடு தேடி வந்ததால் மகிழ்ச்சி அடைந்தனர். தமிழகத்தில் 2012-13 ம் ஆண்டு போதிய பருவ மழை இல்லாததால் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்கு ஆளாகினர். அப்போது கடலை, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு சில விவசாயிகள் இன்சூரன்ஸ் தொகை செலுத்தினர். இந்த விவசாயிகளுக்கு தற்போது வறட்சி நிவாரண தொகை வீடு தேடி வந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.16 கோடி ரூபாய் நிதி வந்துள்ளது. இதனால் தொப்பம்பட்டி, பழநி, குஜிலியம்பாறை பகுதிகளில் பிரிமியம் கட்டிய விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராஜரத்தினம் கூறியதாவது: விவசாயிகளுக்கு வழங்கப்படும் இன்சூரன்ஸ் தொகையின் விபரத்தை சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் ஒட்ட வேண்டும். இல்லையேல் முறைகேடு நடக்கவும், விவசாயிகள் வெறுமனே அலைச்சலுக்கு ஆளாகவும் நேரிடும், என்றார்.

## வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

விழுப்புரம்: கோலியனூர் ஒன்றியப் பகுதியில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார். கோலியனூர் ஒன்றிய பகுதிகளில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி ஆய்வு

மேற்கொண்டார். விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டத்தை கொளத்தூர் கிராமத்தில் ஆய்வு செய்தார். கோலியனூர் வேளாண்மை விரிவாக்க மையம், கண்டமானடி துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண் இடுபொருள் இருப்பு மற்றும் வினியோக முறைகள் குறித்து ஆய்வு செய்தார். வேளாண்மை துணை இயக்குனர் இளவரசன், வேளாண்மை உதவி இயக்குனர் செல்வசேகர், வேளாண்மை அலுவலர் கங்கா கவுரி, உதவி வேளாண்மை அலுவலர் ஏழுமலை உடனிருந்தனர்.

## <u>தோட்டக்கலைத்துறையில் விவசாயிகளுக்கு மானியம்</u>

தேனி : தோட்டக்கலைத்துறையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு 50 சத மானியம் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சி திட்டத்தில் வாழைத்தார் உறைகளுக்கு ரூ.2.5 லட்சம், பந்தல் காய்கறிகள் சாகுபடி செய்ய ரூ.6.8 லட்சம், துல்லிய பண்ணை திட்டத்தில் திசு வாழை சாகுபடிக்கு ரூ.8 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வாழைதார்கள் உற்பத்தி செய்ய உறைகள் 50 சத மானியத்தில் எக்டேருக்கு ரூ.12,500 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. பந்தல் காய்கறிகள் சாகுபடி செய்ய பந்தல் அமைக்க 50 சதம் மானியத்தில் எக்டேருக்கு,ரூ.1.94 லட்சம் மானியமும் , பந்தல் காய்கறி விதைகளுக்கு எக்டேருக்கு ரூ.5,600 மானியமும் வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணை திட்டத்தில் வாழை விவசாயம் செய்ய 40 சத மானியத்தில் எக்டேருக்கு ரூ.30,750 மானியம் வழங்கப்படுகிறது.

## <u>சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தில் முள்மரங்கள் வளர்க்கும் வனத்துறை</u>

சின்னமனூர் : வன வளத்தை அதிகரிக்க செயல்படுத்தப்படும் "சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தில்' மழையை ஈர்க்கும் தன்மையில்லாத முள் வகையை சேர்ந்த மரங்களை வனத்துறை வளர்த்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் வன வளத்தை அதிகரிக்க, பசுமை மாறாத மரங்களை நடவு செய்ய திட்டமிடப்பட்டு, சமூக காடுகள் வளர்ப்பு

திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் பயன் தரும் மரங்களை நடவு செய்வதற்கு பதிலாக சாலி, வேலம் மரங்களை வனத்துறையினர் வளர்த்தனர். இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.அசோகர் பசுமை இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் திருப்பதி வாசகன் கூறியதாவது: சமூக காடுகள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தில் வனத்திற்குள் சாலி, வேலம், கருவேலம், சீமை கருவேலம் ஆகிய முள் மரங்கள் மட்டுமே 95 சதவீதம் நடப்பட்டுள்ளது. இந்த மரங்கள் இயற்கையான கால சூழலுக்கு எதிரானவை. மழையை ஈர்க்கும் தன்மையில்லாத இந்த மரங்கள் வனப்பகுதிக்குள் வளர்த்துள்ளதால், இயற்கை சூழல் மாறி பருவ மழை தொடர்ந்து பொய்த்து போகிறது. இவ்வகை மரங்களை வனப்பகுதிக்குள் முற்றிலுமாக அகற்றி விட்டு இயற்கை மற்றும் பருவ நிலையை சமன்படுத்தும் அரசம், ஆலம், வேம்பு, புங்கன், பூவரசு, வாகை மரங்களை நடவு செய்ய வனத்துறை முன்வர வேண்டும்', என்றார்.வனத்துறையினர் கூறியதாவது: 25 ஆண்டுகளுக்கு முன் சாலி, வேலம், கருவேலம் உள்ளிட்ட மரங்கள் நடவு செய்யப்பட்டன. தற்போது வனத்துறையின் நர்சரியில் வளர்க்கப்படும் மர கன்றுகளில் பெரும்பாலானவை மழை பொழிவை ஈர்க்கும் தன்மை கொண்ட கொன்ன வாகை, தூங்கு மூஞ்சி, புங்கன் வகையை சார்ந்தவை. வளர்ந்து நிற்கும் முள் வகையை சார்ந்த மரங்களை அப்புறப்படுத்துவது அரசின் கொள்கை முடிவை சார்ந்தது', என்றனர்.

## <u>திராட்சையில் செவட்டை பாதிப்பு தோட்டக்கலைத்துறை ஆலோசனை</u>

தேனி : செவட்டை நோய் பாதிப்பை தவிர்க்க மழைக்காலம், குளிர்காலத்தில் திராட்சை உற்பத்தி செய்யாமல் இருப்பதே சிறந்த வழி என தோட்டக்கலைத்துறை தெரிவித்து உள்ளது. தேனி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த பனி காரணமாக கம்பம், சின்னமனூர் பகுதியில் திராட்சையில் செவட்டை நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை தடுக்க வழியில்லை என தோட்டக்கலைத்துறை கூறி உள்ளது. தோட்டக்கலைத்

துறை அதிகாரிகள் கூறியதாவது: கம்பம் பகுதியில் திராட்சையில் ஆண்டுக்கு மூன்று முறை சாகுபடி எடுக்கப்படுகிறது. இதனால் திராட்டை அறுவடை முடிந்த உடனே கவாத்து செய்து அடுத்த சாகுபடிக்கு தயாராகி விடுகின்றனர். இது மிகவும் தவறான அணுகுமுறை.திராட்சை அறுவடை முடிந்ததும் 45 நாள் கழித்து கவாத்து செய்தால், ஆண்டுக்கு இருமுறை மட்டும் சாகுபடி கிடைக்கும். இப்படி கிடைக்கும் சாகுபடி மூலம் தரமான திராட்சை கிடைக்கும். மழைக்காலம், குளிர்காலத்தில் திராட்சை சாகுபடி செய்வது தவிர்க்கப்படும். மழைக் காலம், குளிர்காலத்தில் செவட்டை நோய் திராட்சையினை தாக்கும். இந்த பாதிப்பினை தடுக்க அதிக மருந்து செலவிட வேண்டி வரும். இந்த காலத்தில் விற்பனை வசதியும் கிடைக்காது. எனவே உற்பத்தி செலவோடு ஒப்பிட்டு பார்த்தால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும். இவ்வாறு கூறினர்.

## <u>***திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் காற்றின் திறன் அளக்கும் கருவி***</u>

உத்தமபாளையம் : திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் காற்றின் வீசும் திறன், எந்த திசையில் வீசியது போன்றவற்றை அளவீடுசெய்யும் கருவி பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா, சீனியர் டெக்னீசியன் மணி ஆகியோர் கூறியதாவது:திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். ஆராய்ச்சி நிலையம் தற்போது திராட்சை புதிய ரக குச்சிகள் வினியோகம் செய்ய தயாராகி வருகிறது. தற்போது தானியங்கி வானிலை மையம் அமைக்கும் பணிகள் துவங்கியுள்ளது.இதற்கிடையே வீசும் காற்றின் அளவு, எந்த திசையில் இருந்து வீசுகிறது என்பதை கண்டறிய "விண்ட் வேண்' என்ற கருவி பொருத்த முடிவுசெய்யப்பட்டுள் ளது. இந்த கருவி பொருத்தப்பட்டால் 24 மணிநேரத்தில் வீசிய காற்றின் அளவு, அதன் வேகம், வீசிய திசை

போன்றவற்றை தெரிந்து கொள்ளலாம். அதே போன்று சூரிய ஒளி வீசிய மொத்த நேரத்தை அளக்க "சன் ரெக்கார்டர்,' அதன் உக்கிரத்தை தெரிந்து கொள்ள "பைரோனோ மீட்டர்' போன்ற அதிநவீன கருவிகள் நிறுவப்படஉள்ளது. காற்று, சூரிய ஒளி போன்றவைகளின் தன்மை கண்டறியப்பட்டு அதற்கேற்ப விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும், என்றனர்.

**<u>விவசாய உற்பத்தியாளர் நிறுவன துவக்க விழா</u>**

அருப்புக்கோட்டை : அருப்புக்கோட்டை சவுடாம்பிகா இன்ஜி., கல்லூரியில், சீட்ஸ் நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விவசாய உற்பத்தியாளர் நிறுவன துவக்க விழா நடந்தது. கல்லூரி செயலர் ரவிபாபு தலைமை வகித்தார். முதல்வர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். சென்னை நபார்டு பாங்க் முதன்மை பொது மேலாளர் வெங்கடேஸ்வரராவ், பொது மேலாளர்கள் நடராஜன், அனந்த கிருஷ்ணன் பேசினர். உதவி பொதுமேலாளர் சுப்பிரமணியன், நியூ இந்தியா அஸ்யுரன்ஸ் கம்பெனி மண்டல மேலாளர் ராஜ்குமார், கிளை மேலாளர் பிரபாகரன், சீட்ஸ் நிறுவன செயலர் பாண்டியன் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரி பி.ஆர்.,ஓ., ரமேஷ் செய்திருந்தார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ரூ.45 ஆயிரத்திற்கு விற்பனையான வட்ட வடிவ அதிசய 'கோழி முட்டை'</u>**



லண்டன், பிரபல ஆன்லைன் ஷாப்பிங் வெப்சைட்டான ஈபே-யில் ஒரு கோழியின் முட்டை ரூ.45 ஆயிரத்திற்கு விற்பனையாகியுள்ளது. இங்கிலாந்தின் லட்சிங்டன்னில் வசித்து வருபவர் கிம் பிராட்டன். அவரது தோட்டத்தில் கோழிகளை வளர்த்து வருகிறார். இந்நிலையில் அவரது கோழிகளில் செல்லமாக வளர்ந்து வந்த பிங் பாங் அதிசயமாக பந்து போல வட்ட வடிவத்தில் முட்டையிட்டது. ஆச்சர்யத்தில் வாயடைத்து போன கிம் இந்த முட்டையை ஆன்லைனில் விற்க முடிவு செய்தார். பின்னர் ஈபே-வெப்சைட்டில் விற்பனைக்கு விளம்பரம் செய்தார். அதை பார்த்து பலர் வாங்குவதற்கு முன்வந்தனர். குறிப்பாக, 64 பேர் ஏலம் கேட்பது போல மாறி மாறி அதிக விலைக்கு கேட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் அந்த அதிசய முட்டையை வாங்கி பாதுகாக்கவே முடிவு செய்திருந்தனர். இறுதியாக ஒருவருக்கு ரூ.45 ஆயிரம் (480 பவுண்டுகள்) விலைக்கு விற்கப்பட்டது. வாங்கியவரின் விபரம் தெரியவில்லை. அந்த முட்டையை விற்ற பணத்தை அவரது நண்பரின் மகன் நோயால் இறந்ததன் நினைவாக சிஸ்டிக் பிப்ரோசிஸ் என்ற டிரஸ்ட்டுக்கு நன்கொடையாக கொடுத்து விட்டார்.

## முகூர்த்த நாளையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை உயர்வு பீன்ஸ், அவரைக்காய், வெண்டைக்காய் ஒரு கிலோ ரூ.25-க்கு விற்பனை



சென்னை, முகூர்த்த நாளையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை சற்று உயர்வாக காணப்பட்டது. பீன்ஸ், அவரைக்காய், வெண்டைக்காய் ரூ.25-க்கு விற்பனை செய்யப்பட்டது.

சற்றுஉயர்வு

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 300 லாரிகளில் காய்கறிகள்

விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. அங்கிருந்து சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து வாங்கி செல்கின்றனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. ஆனால் கடந்த 2 நாட்களாக காய்கறிகள் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி, கடந்த வாரத்தில் ஒரு கிலோ பீன்ஸ் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை ஆனது. ஒரு கிலோ ரூ.15-க்கு விற்பனை செய்யப்பட்ட வெண்டைக்காய், நேற்று ஒரு கிலோ ரூ.25-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதே போல், சாம்பார் வெங்காயம், அவரைக்காய், சேப்பக்கிழங்கு ஆகியவற்றின் விலையும் சற்று உயர்ந்துள்ளது.
இது குறித்து கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன்கூறியதாவது:-

முகூர்த்தநாட்கள்...

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து காய்கறிகள் விலை குறைந்து தான் காணப்படுகிறது. தற்போது சுபமுகூர்த்த நாட்கள் காரணமாக கடந்த 2 தினங்களாக காய்கறிகள் விலை கடந்த வாரத்தின் விலையை காட்டிலும் சற்று உயர்ந்துள்ளது. இருப்பினும் காய்கறிகள் விற்பனை நல்ல படியாக நடக்கிறது. இந்த மாதம் இறுதி வரை இதே நிலைதான் இருக்கும். காய்கறிகள் வரத்து நன்றாக இருக்கிறது. தற்போது நாளொன்றுக்கு 310 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. மார்க்கெட்டில் மாங்காய் கொஞ்சம் கொஞ்சமாக விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஒரு கிலோ ரூ.80-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த மாதம் 15-ந்தேதியில் இருந்து மாங்காய் வரத்து அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விலைநிலவரம்

கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம்(ஒரு கிலோ) வருமாறு:-

உருளைக்கிழங்கு - ரூ.20, பல்லாரி - ரூ.20 முதல் ரூ.25 வரை, பீன்ஸ் - ரூ.20 முதல் ரூ.25 வரை, கேரட் - ரூ.20, நூக்கல் - ரூ.10, சவ்சவ் - ரூ.15, முருங்கைக்காய் - ரூ.80, முட்டைக்கோஸ் - ரூ.10, பீட்ரூட் - ரூ.12, சேனைக்கிழங்கு - ரூ.18, சேப்பக்கிழங்கு - ரூ.30, கத்தரிக்காய் - ரூ.10 முதல் ரூ.20 வரை, வெண்டைக்காய் - ரூ.25, அவரைக்காய் - ரூ.25 வரை, கோவக்காய் - ரூ.15, புடலங்காய் - ரூ.15, காலிபிளவர் - ரூ.20, சாம்பார் வெங்காயம் - ரூ.40, தக்காளி - ரூ.12 முதல் ரூ.18 வரை, கொத்தவரங்காய் - ரூ.20, கோவக்காய் - ரூ.20, பாகற்காய் - ரூ.15, இஞ்சி - ரூ.45, மிளகாய் - ரூ.20, சுரைக்காய் - ரூ.10, தேங்காய் - ரூ.18 முதல் ரூ.20 வரை, பூசணிக்காய் - ரூ.10, மாங்காய் - ரூ.80, வாழைக்காய் - ரூ.5. இவ்வாறு அவர் கூறினார்.

## வால்பாறையில் 5-வது நாளாக மழை நீடிப்பு ஆறுகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு



வால்பாறையில் நேற்று 5-வது நாளாக தொடர்ந்து மழை பெய்தது. இதனால் ஆறு களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

கடும்வறட்சி

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக கடும் வறட்சி நிலவி வந்தது. இதனால் ஆறுகள் உள்பட நீர் நிலை களில் தண்ணீர் வரத்து குறைந் தது. மேலும் பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின் அடிப் படை அணைகளான சோலை யார், நீரார், சின்னக் கல்லார் உள்பட அணைகளின் நீர்மட் டம் குறைந்தது. மேலும் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இது மட்டுமின்றி வறட்சியினால் வால்பாறை பகுதியில் உள்ள தேயிலை செடிகள் கருகும் அபாயம் ஏற்பட்டது.

5-வதுநாளாகமழை

இந்த நிலையில் கடந்த 26-ந் தேதி முதல் வால்பாறை மற்றும் அதனை சுற்றி உள்ள எஸ்டேட் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் கன மழையும் பெய்து வருகிறது. நேற்று 5-வது நாளாக மழை பெய்தது. வால்பாறையில் மழை தூறிக் கொண்டே இருந்த போதி லும், எஸ்டேட் பகுதிகளில் விட்டு, விட்டு பலத்த மழை பெய்தது. நல்ல மழை பெய்துள்ளதால் வால் பாறையில் உள்ள ஆறுகள், அணைகள் உள்பட நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் 27 அடியாக உயர்ந்துள்ளது. நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில் சின்னக் கல்லாரில் 6 மி.மீ. , நவமலையில் 9.4 மி.மீ., ஆழியாறில் 7.4 மி.மீ., மழை அளவு பதிவாகி இருந்தது.

சுற்றுலாபயணிகள்மகிழ்ச்சி

தொடர்ந்து மழை பெய்து வருவதால் வால்பாறை பகுதி குளு, குளுவென்று மாறி விட்டது. இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பொள்ளாச்சி பகுதியில் கடுமையான வெயில் சுட்டெரித்த போதிலும், அவ்வப்போது வானத்தில் மழை மேகங்கள் காணப் பட்டாலும், மழை பெய்யாமல் ஏமாற்றி வருகிறது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் எப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்த் துள்ளனர்.

## <u>கடலூர் முதுநகர் அருகே கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>



கடலூர் முதுநகர், தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று முன்தினம் தொடங்கியது. கடலூர் மாவட்டத்திலும் 3 லட்சத்து 65 ஆயிரம் மாடுகளுக்கு கோமாரி நோய்

தடுப்பூசி போடும் பணி கலெக்டர் சுரேஷ்குமார் உத்தரவின் பேரில் நடைபெற்று வருகிறது. இதற்காக கால்நடைத்துறை மருத்துவர்கள் தலைமையில், கால்நடை ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள், ஓய்வுபெற்ற கால்நடை ஆய்வாளர்கள் ஆகியோரை கொண்ட 60 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுவினர் கிராமங்கள் தோறும் முகாம் அமைத்து பொதுமக்களின் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் கடலூர் முதுநகர் அருகே உள்ள மணக்குப்பம், சின்னபிள்ளையார் மேடு, பெரிய பிள்ளையார் மேடு, கே.புதூர், வள்ளிகாரைக்காடு, காரைக்காடு அங்காளம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கடலூர் கால்நடை உதவி இயக்குநர் டாக்டர் ராமமூர்த்தி, கண்ணாரப்பேட்டை கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் சூசைமரிமிக்சன், ஆய்வாளர்கள் ரமேஷ், ஞானசவுந்தரி, ஓய்வுபெற்ற கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திரசோழன், பராமரிப்பு உதவியாளர்கள் சக்திவேல் ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் 467 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். இந்த முகாம் மாவட்டம் முழுவதிலும் வருகிற 21-ந் தேதி வரை நடக்கிறது.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முதல் வரும் 21ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது. வெங்கடேசபுரம் கிராமத்தில் துவங்கிய முகாமை, ஆட்சியர் சம்பத் துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறுகையில், இம்மாவட்டத்தில் மொத்தமுள்ள 6,71,159 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. தடுப்பூசி வைப்பதற்காக 21 இடங்களில் குளிர்பான கிடங்குகள்

அமைக்கப்பட்டு அங்கிருந்து கிராமங்களுக்கு எடுத்து செல்லப் படுகின்றன. தடுப்பூசி போடுவதற்கு மொத்தம் 107 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று ஊராட்சிகளுக்கு உதவி இயக்குநர் நிலையில் கோமாரி நோய் தடுப்பூசி பணியை கண்காணிக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், என்றார். கால்நடைத்துறை இணை இயக்குநர் குருவையா, உதவி இயக்குநர்கள் சுந்தர்ராஜன், மகேந்திரன், அன்பழகன், சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கொங்கணாபுரத்திற்கு பருத்தி வரத்து அதிகரிப்பு இன்றும் ஏலம் நடக்கிறது</u>

இடைப்பாடி, : சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்து அதிகரித்துள்ளது. 15 ஆயிரம் மூட்டை பருத்தி, ரூ.2.5 கோடிக்கு விற்பனையானது. இன்றும் ஏலம் நடக்கிறது. சேலம் மாவட்டம் கொங்கணாபுரத் தில் உள்ள திருச்செங் கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தில், வாரந்தோறும் சனிக்கிழமை பருத்தி ஏலம் நடை பெறும். பிற மாவட்டங்களில் இருந்து பருத்தி வரத்து அதிக மாக இருந்ததால், ஒருநாளைக்கு முன்னதாகவே பருத்தி ஏலம் தொடங்கியது. இந்த ஏலத்தில் பெங்களூரு, ஓசூர், கோவை, திருவண்ணா மலை, ஈரோடு, தர்மபுரி, நாம க்கல், கிருஷ்ணகிரி, சே லம், உள்ளி ட்ட பகுதிகளில் இரு ந்து வியாபாரிகள் பங்கேற்றனர். முதல்நாள் நடைபெற்ற ஏலத்தில் 15 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ2.5 கோடிக்கும், மறுநாள் (சனிக்கிழமை) நடைபெற்ற ஏலத் தில் 15 ஆயிரம் பருத்தி மூட் டைகள் ரூ2.5 கோடிக் கும் விற்பனையானது. இதையடுத்து, நேற்று 3வது நாளாக ஏலம் நடைபெற்றது. இதில், 15 ஆயிரம் மூட்டைகளில் 10 ஆயிரம் மூட்டை விற்றுத்தீர்ந்தது. பிடி ரகம் குவிண்டாலுக்கு (100கிலோ) ரூ4050 முதல் ரூ4666 வரை யிலும், டிசிஎச் ரகம் ரூ4430 முதல் ரூ5166 வரையிலும் ஏலம் போனது. இதன்மூலம் ரூ2 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. ஆக மொத் தம் 3 நாட்களில் ரூ7 கோடி க்கு பருத்தி

விற்பனையாகியு ள்ளது. மீதம் உள்ள 5 ஆயி ரம் பருத்தி மூட்டைகள் இன்று ஏலம் விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர அழைப்பு**

கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர மாவட்ட கலெக்டர் ராஜேஷ் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஆரம்பித்து பதிவு செய்து, செயல்பட்டு வருகிறது. இம்முகமையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மீன் வளர்ப்போர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து அரசு நலத்திட்டங்கள் பெற்று வருவாயினை பெருக்கி, மாவட்டத்தின் மீன் உற்பத்தியினையும் பெருக்க வேண்டும் என்ற நோக்கில் அனைத்து மீன்வளர்ப்போரும் இம்முகமையில் உறுப்பினராக சேர்ந்து பயன்பெற கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். எனவே தகுதியான, மீன்வளர்ப்போர்கள் முகமை உறுப்பினர்களாக பதிவு செய்ய கிருஷ்ணகிரி மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம், பாம்பாறு அணை, பாரூர், கிருஷ்ணகிரி அணை ஆகிய இடங்களில் உள்ள மீன் வள ஆய்வாளர்கள் அலுவலகங்கள், ஓசூர் மீன்வள சார் ஆய்வாளர் அலுவலகம் ஆகியவற்றை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலைத்துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும் மரக்கன்றுகளின் தரத்தினை உறுதி செய்திட வேண்டும் மாவட்ட திட்டக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்ட திட்டக்குழு கூட்டம் தலைவர் அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவரும், மாவட்ட கலெக்டருமான ராஜேஷ் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசியதாவது:கிராமப்புற விவசாய நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுக்கு மின்இணைப்பு கோரி

வரப்பெற்ற விண்ணப்பங்களில் நிலுவையில் உள்ள இனங்களுக்கு 10 தினங்களுக்குள் மின் இணைப்பு வழங்கிட வேண்டும். மஞ்சுகொண்டப் பள்ளி, தொட்டமஞ்சி, கோட்டையூர் மற்றும் உரிகம் ஆகிய ஊராட்சிகளில் வசிக்கும் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திடத்தின்கீழ் ஊராட்சிக்கு கூடுதலாக வீடுகள் ஒதுக்கீடு செய்திடவும், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் மழை நீர், ஏரிகளுக்கு வரும் வகையில் கால்வாய்களை தூர்வாரிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தோட்டக்கலைத்துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும் மரக்கன்றுகளின் தரத்தினை உறுதி செய்திடவும், தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உரங்களை தொடர் பராமரிப்பிற்கு வினியோகம் செய்திட வேண்டும் என உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும், தகுதியுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பர்கூர் ஒன்றியம் சிந்தகம்பள்ளி, கெம்பிநாயனப்பள்ளி, பசவண்ணகோவில், குருவிநாயனப்பள்ளி,பெருகோபனப்பள்ளி, கரடிகொல்லப்பட்டி, பனந்தோப்பு, கிட்டனூர், அஞ்சூர், செந்தாரப்பள்ளி, சூளகிரி ஒன்றியம் பாஞ்சாலியூர், நாப்பரம்பட்டி ஆகிய இடங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்கிட வேண்டும் என உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசலம், ஒன்றியக்குழு தலைவர்கள் பர்கூர் ஜெயபாலன், வேப்பனஹள்ளி முனியப்பன், காவேரிப்பட்டணம் ஜமுனா கிருஷ்ணன், திட்டக்குழு உறுப்பினர்கள் கோவிந்தராஜ், குப்புசாமி, கண்ணன், ராஜேந்திரன், பெருமாள், முத்துலட்சுமி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் மாவட்ட திட்ட பிரிவு அலுவலர் முத்தழகன் நன்றி கூறினார்.

## மருதேப்பள்ளியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை கலெக்டர் தொடங்கி வைத்தார்.பர்கூர் ஒன்றியம் மருதேப்பள்ளி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமினை கலெக்டர் ராஜேஷ் தொடங்கி வைத்து பேசியதாவது: தமிழக அரசின் உத்தரவுப்படி வருகின்ற 21ம் தேதி வரை இடைவிடாமல் 21 நாட்களுக்கு கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின்கீழ் 8வது சுற்றாக மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள 3 லட்சத்து 63 ஆயிரத்து 300 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 4 மாத கன்றுகள் உள்பட அனைத்து கால்நடைகளுக்கும் விவசாய பெருமக்கள், பொதுமக்கள் தங்களது கால்நடைகளுக்கு தவறாமல் தப்பூசி போட்டு செல்ல வேண்டும். தடுப்பூசி போடுவதால் பால் குறைவு அல்லது சினை பாதிப்பு ஏற்படாது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுப்பதற்காகவே இது போன்ற தடுப்பூசிகள் போடப்படுகிறது. தற்போது அரசு இலவசமாக கால்நடைகளுக்கு தொடர்ந்து தடுப்பூசி வழங்கி வருவதால் இந்நோய் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. எனவே, கால்நடை கள் வைத்திருக்கும் விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் இந்த மருத்துவ முகாமில் தடுப்பூசியை தங்கள் கால்நடைகளுக்கு இட்டு கொண்டு முழுமையாக பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முகாமில் மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் வேடியப்பன், கால்நடை மருத்துவர்கள் அருள்ராஜ், வேலன், நாகராஜ், கால்நடை துறை ஆய்வாளர்கள் பன்னீர்செல்வம், சின்னசாமி, நாகராஜன், ஊராட்சி மன்ற தலைவர் கண்ணம்மாள் பெருமாள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## அரசு வழங்கும் கடனுதவிகளை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் கலெக்டர் பேச்சு

தேன்கனிக்கோட்டை, : தளி அருகே தேவர்பெட்டா கிராமத்தில் மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது. ஆர்டிஓ ஜோதிலிங்கம் வரவேற்றார். பின்னர் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கி கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது: தமிழக அரசின் உத்தரவுபடி கிராமப் புறங்களில் வாழும் மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்ட, கடனுதவிகளை வழங்கி வருகிறது. 853 பயனாளிகளுக்கு ரூ.52 லட்சம் 32 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதில் இலவச வீட்டுமனைப்பட்டா 169, வீட்டுமனைப்பட்டா நகல்கள் 32, புதிய குடும்ப அட்டை 100, பட்டா மாறுதல் ஆணைகள் 134, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வறுமை ஒழிப்பு சங்க கட்டமைப்புகள் 57 சங்கங்களுக்கு கடனுதவிகள், உட்பிரிவு செய்து தனிப்பட்டா 348, தோட்டக்கலைத் துறை சார்பில் 8 நபர்களுக்கு இடு பொருட்கள் வேளாண்மைத் துறை சார்பில் இடுபொருட்கள் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் கதிரேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் பிச்சைராமன், ஊராட்சி மன்றத்தலைவர் முனிராஜ், தாசில்தார் கோவிந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டம் முழுவதும் முகாம்கள் 3.70 லட்சம் கால்நடைக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி துவங்கியது

ஈரோடு, : தேசிய கோமாரி நோய் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் நேற்று தொடங்கியது. இதனை கலெக்டர் பிரபாகர் தொடங்கி வைத்தார். மாவட்டம் முழுவதும் 3.69 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் அதிகரித்த நிலையில் மாடுகள் இறந்து போனது. குறிப்பாக கிராமப்புறங்களில் இந்த நோயினால் மாடுகளின் இறப்பு அதிகரித்து வந்தது. இதையடுத்து கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கிராமங்களுக்கு நேரடி ஆய்வு செய்யப்பட்டு உடனடியாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதனால் மாடுகளின் இறப்பு கட்டுக்குள் வந்தது. மார்ச், செப்டம்பர் மாதத்தில் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ் கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் ஈரோடு அருகே 46-புதூர் நொச்சிக்காட்டுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்தது. இந்த முகாமினை கலெக்டர் பிரபாகர் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் 3 லட்சத்து 69 ஆயிரத்து 900 கால்நடைகள் உள்ளது. இந்த கால்நடைகளுக்கு கோமாரி நோயை தடுக்கும் வகையில் தடுப்பூசி முகாம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக கால்நடை மருத்துவர்கள் தலைமையில் 117 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு குழுவில் கால்நடை மருத்துவர், ஆய்வாளர், பராமரிப்பு ஆய்வாளர் என 3 பேர் உள்ளனர். இந்த குழுவினர் கிராமப்புற பகுதிகளுக்கு சென்று கால்நடைகளை கண்டறிந்து தடுப்பூசி போடவுள்ளனர். தினசரி காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும்

தடுப்பூசி போடப்படவுள்ளது. அனைத்து கால்நடைகளுக்கு 21ம் தேதிக்குள் தடுப்பூசி போடப்படவுள்ளது. அதற்கு பிறகு விடுபட்ட கால்நடைகளை கண்டறிந்து இம்மாத இறுதி வரை தடுப்பூசி போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் டாக்டர் தங்கவேல், டாக்டர் கோவிந்தராஜ், மண்டல இணை இயக்குநர் டாக்டர் முருகன், ஆவின் துணை பொதுமேலாளர் தேவராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கண்வலிக்காய் விதையை அரசு கொள்முதல் செய்ய வலியுறுத்தல்</u>

தாராபுரம், : தாராபுரம் பகுதியில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் கண்வலிகாய் விதைகளை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்கம் வலியுறுத்தி உள்ளது. தாராபுரம் பகுதி அதிக விளைச்சல் உள்ள முருங்கைக்கு பருவகாலத்தில் போதுமான விலை கிடைப்பதில்லை. முருங்கையை பாதுகாத்து விற்பனை செய்ய குளிர் பதனக்கிடங்கு மற்றும் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கண்வலிகாய் விதை உற்பத்தி அதிகரித்து வருவதால் தனியார் கொள்முதல் விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. விவசாயிகள் நலன் கருதி அரசே கொள்முதல் செய்ய பரிந்துரை செய்ய வேண்டும். காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தில் கொளத்துப்பாளையம் பகுதியில் அடிக்கடி குழாய் உடைப்பு ஏற்படுவதால் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. குடிநீர் வடிகால் வாரியம் 2 மாதத்திற்கு ஒரு முறை குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடத்தி பொது மக்களின் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

## <u>மார்க்கெட்டில் பூசணிக்காய் வரத்து அதிகரிப்பு</u>

பொள்ளாச்சி,: பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில் தென்னைக்கு அடுத்தப்படியாக மானாவாரி பயிர் கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி

செய்யப்படுகிறது. இதில் பல கிராமங்களில் பூசணி மற்றும் அரசாணிக் காய் விதைப்பில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். சுற்று வட்டாரத்தில் வடக்கிபாளையம், நெகமம், கோமங்கலம், கோட்டூர், சமத்தூர், ராமபட்டினம், கோபாலபுரம், சூலக்கல், கோவில்பாளையம் உள்ளிட்ட கிராம பகுதிகளில் பூசணிக்காய் அதிகளவு விதைக்கப் பட்டுள்ளது. அவை விளைச்சல் அதிகரித்தவுடன் அறு வடை செய்யப்பட்டு மார்க்கெட்டுக்கு மொத்த விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இதில் கடந்த ஆண்டு பருவமழை பொழிந்த போது, அதனை எதிர் நோக்கி பல கிராமங்களில் விவசாயிகள் பூசணிக்காய் மற்றும் அரசாணிக்காய் சாகுபடியில் தீவிரம் காட்டி னர். கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் விதைக்கப்பட்ட பூசணிக்காய் தற்போது நன்கு விளைந்து காணப்படுகிறது. அதனை விவசாயிகள் அறுவடை செய்து, மார்க்கெட்டுக்கு கொண்டு வருவதை தொடர்ந்துள்ளனர். பூசணிக்காயை பெரும்பாலும் கேரளா வியாபாரிகளே வாங்கி செல்கின்றனர். கடந்த ஜனவரி மாத த்தில் மார்க்கெட்டுக்கு பூசணிக்காய் வரத்து குறை வாக காணப்பட்ட போது ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.18 வரை விற்பனையானது. தற்போது பூசணிக்காய் வரத்து வழக்கத் தை விட அதிகமாக இருப்பதால் ஒரு கிலோ ரூ.6க்கும் (மொத்தவிலை) சில்லரை விலைக்கு ரூ.8க்கும் விற் பனை செய்யப் படுகிறது. தற்போது மழைப்பொழிவு இல்லாமல் வெயிலின் தாக்கம் இருப்பதால், வெயி லின் தாக்கத்தில் பூசணிக் காய் விரைவில் பழுத்து விடும் நிலை உள்ளது. எனவே, அதனை விரைந்து அறுவடை செய்து மார்க்கெட்டுக்கு அதிகமாக கொ ண்டு வருவது தொடர்ந் திருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>பனிக்காலத்தில் கவாத்து செய்வதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும்</u>

மஞ்சூர், : மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவ சாயம் பிரதான தொழிலாக உள்ளது. சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மஞ்சூர் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் துவங்கிய பனி பொழிவு தொடர்ந்து நான்கு மாதங்களுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இதனால் மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட எக்டர் பரப்பிலான தேயிலை தோட்டங்களில் தேயிலை செடிகள் வெந்து கருகி போயுள்ளது. இதனால் பசுந்தேயிலை மகசூல் பெருமளவு குறைந்துள்ளது. இந்நிலையில் பனியின் தாக்கத்தினால் விவசாயிகள் சிலர் தங்களது தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளை கவாத்து செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பனிக்காலத்தில் கவாத்து செய்வதால் தேயிலை செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும் நிலை உள்ளது. இதுகுறித்து குந்தா வட்டார தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் கூறுகையில், 'குந்தா பகுதியில் கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக பனி நீடித்து வருகிறது. பனியின் தாக்கத்திலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க ஸ்பிரிங்லர் உதவியுடன் தண்ணீர் பாய்ச்சுவது அல்லது செடியின் மேல் கோத்தாரி போன்ற இலைகளை போட்டு பாதுகாத்து கொள்ள வேண்டும். சிலர் அறியாமல் பனிக்காலத்தில் தேயிலை செடிகளை கவாத்து செய்கின்றனர். பனிக்காலத்தில் கவாத்து செய்வதை விவசாயிகள் தவிர்க்க வேண் டும். தேயிலை தோட்டங்களில் கவாத்து செய்ய ஏற்ற சீதோஷ்ண நிலை ஏப்ரல் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் மட்டுமே. அதுவும் மண் பரிசோதனை செய்து டால்மென்ட் போட்டு நல்ல ஈரப்பதத்தில் கவாத்து செய்தால் மட்டுமே செடிகளின் வளர்ச்சி மற்றும் அதன் ஆயுட்காலம் நன்றாக இருக்கும்' என்றார்.

## முதல் முறையாக வயல் வெளியில் நேரடி மக்காச்சோளம் விற்பனை விவசாயிகள் ஆர்வலர் குழு ஏற்பாடு

திருச்சி, : விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் முதல் முறையாக வயல் வெளியில் நேரடி மக்கா சோளம் விற்பனை செய்யப்பட்டது. முசிறி, தொட்டியம் வட்டாரங்களில் விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் எம். களத்தூர் கிராமத்தில் மக்காச்சோளம் சாகுபடி அறு வடை செய்து

வைத்திருந்த விவசாயி குமார் என்பவரி டம் 7,100 கிலோ மக்காசோளம், வியாபாரி செந்தில்குமாரிடம் ஒரு கிலோ ரூ.12 என விற்பனை செய்யப் பட்டது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் மூலம் நேரடியாக வயல் வெளிகளுக்கு வியாபாரிகளை அழைத்து வந்து விற்பனை க்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் மொத்தம் ரூ.85,200க்கு வயல் வெளி யிலே விவசாயிக்கு வழங்கப் பட்டது. இது குறித்து வேளாண் வணிகம் துணை இயக்கு னர் சந்திரசேகரன் கூறுகை யில், இந்த நேரடி வியாபாரி, விவசாயி விற்பனை பரிமாற்றத்திற்கு தொட்டியம் வேளாண் வணிகம் உதவிஅலுவலர்கள் சரவணக்குமார், புஷ்பா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். எம்.களத் தூர் விவசாயிகள் ஆர்வலர் குழு அமைக்கப்பட்டு இதன் மூலம் முதன் முறையாக வயல் வெளியில் நேரடியாக மக்காச்சோளம் விற்பனை செய்யப் பட்டன என தெரிவித்தார்.

## காட்டுப்புத்தூரில் இயற்கை வேளாண் விழிப்புணர்வு முகாம் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

தொட்டியம், : காட்டுப்புத்தூரில் இயற்கை வேளாண் விழிப்புணர்வு மற்றும் போக்குவரத்து சாலை விதிகள் குறித்த முகாம் நடந்தது. கயிறு இழுக் கும் போட்டியில் வென்ற விவசாயிகளுக்கு வேளாண் கருவி கள் வழங்கப்பட்டன. தொட்டியம் தாலுகா, காட்டுப்புத்தூர் பஸ் நிலைய வளாகத்தில் நியூ கிரியேட்டிவ் பிரி டம்ஸ் இன்டியன்ஸ் அமைப்பு சார்பில் விவசாயிகளுக்கான இயற்கை வேளாண் குறித்த முகாம் நடைபெற்றது. முகா மிற்கு அமைப்பின் சேர்மன் கரு ணாகரன் தலைமை வகித்தார். திருச்சி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தியாகராஜன், லயன்ஸ் கிளப் வேலுசாமி, அதிமுக ஒன்றிய தலைவர் பழனிவேலன், காட்டுப்புத்தூர் பேருராட்சி தலைவர் பரமேஸ் வரி ராமசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை சேர்மன் குணா வரவேற்றார். சென்னை அண்னை வயல் பவுன்டர் மதன் கலந்து கொண்டு இயற்கை முறை விவ சாயம் குறித்து பேசினார். முன் னதாக போக்குவரத்து சாலை விதிகளை

பின்பற்றும் விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் துண்டு பிரசுரங் கள் வழங்கப்பட்டன. தொடர் ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு கயிறு இழுக்கும் போட்டி நடந்தது. போட்டியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளின் அணி கள் கலந்துகொண்டன. போட் டியில் முதலிடத்தில் சீலைப்பிள்ளையார் புத்தூர் விவசாயி அணி வெற்றி பெற்றனர். இதில் முதல் பரிசாக ரூ.11,947 மதிப்புள்ள விவசாய பொருட்களும், 2வது இடம் பெற்ற காட்டுப்புத்தூர் விவசாயிகள் அணிக்கு ரூ.9,947 மதிப்புள்ள விவசாய கருவிகளும், 3ம் இடம் பிடித்த ஸ்ரீராசமுத்திர அணிக்கு ரூ.7,947 மதிப்புள்ள விவசாய கருவிகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து விவசாயிகளுக் கான கயிறு இழுக்கும் போட் டியில் வென்றவர்களுக்கு செம்மரக்கன்றுகள் வழங்கப்பட் டன. நிறைவாக அமைப்பின் செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

## குரும்பலூரில் கோமாரி நோய் தடுப்பூசி பணி துவக்கம்

பெரம்பலூர்,: குரும்பலூரில் கோமாரிநோய்க் கான தடுப்பூசி பணிகளை எம்எல்ஏ தமிழ்ச்செல்வன் தொடங்கிவைத்தார்.பெரம்பலூர் அருகேயுள்ள குரும்பலூரில் கோமாரிநோய்க்கான தடுப்பூசிபோடும் முகாம் நேற்றுநடந்தது. இந்தமுகாமில் பெரம்பலூர் எம் எல்ஏ தமிழ்ச்செல்வன் கோ மாரி நோய்க்கான தடுப்பூசி போடும்பணிகளை துவக்கி வைத்து பேசுகையில், கால்நடைகளை வளர்ப்போர் தங்கள் கிராமத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும் பொழுது 4மாத வயதுள்ள கன்று முதல் சினை, மற்றும் கறவைப்பசு உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடுகளுக்கும் தவறாமல் கோமாரிநோய் தடுப்பூசி போட்டு பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றார். நிகழ்ச்சியில் குரும்பலூர் பேரூராட்சித் தலைவர் பாப்பம்மாள், துணைத்தலைவர் செந்தில்குமார் மற்றும் கால்நடைத்துறையினர் கலந்து கொண்டனர்.

**<u>அதிக மகசூல் பெறுவதற்கு பயிர் சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை அவசியம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்</u>**

சேதுபாவாசத்திரம், : அனைத்து வகை பயிரிகளிலும் அதிக மகசூல் பெற சாகுபடிக்கு முன் மண்பரி சோதனை செய்வது அவசி யம் என சேதுபாவாசத்திரம் வட்டார வேளா ண்மை உதவி இயக்குநர் பெரியசாமி கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: மண்ணில் உள்ள பேரூட்ட சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சம்ச்சீர் முறையில் உரமிடுவதற்கு மண் ஆய்வு அவசியமாகும். பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு மண் ஆய்வு செய்திட வேண்டும். முக்கியமாக கோடை காலங்களில் பயிர் இல்லாத தருணத்தில் செய்வது சிறந்தது. மண் மாதிரியை எரு குவிக்கப்பட்ட இடம், வரப்பு ஓரம், நடைபாதை, வயல் ஓரம், வாமடைப்பகுதி மற்றும் நீர் தேங்கும் பகுதிகளில் மண் எடுப்பதை தவிர்க்க வேண்டும். குறைந்தது ஒரு வயலில் 10 இடங்களில் மண் மாதிரி எடுக்க வேண்டும். 22.5 செ.மீ (3/4 அடி) ஆழம் வரை 'ஸ்'வடிவத்தில் குழி வெட்ட வேண்டும். குழியில் இரு ஓரங்களிலும் 2.5 செ.மீ(1 அங்குலம்) கணத்திற்கு மேலிருந்து கீழாக சுரண்டி வழித்து மண்ணை சேகரிக்க வேண்டும்.சேகரித்த மண்ணை சுத்தமான சாக்கு அல்லது பிளாஸ்டிக்தாள் அல்லது சுத்தமான சிமெ ண்ட் தரையில் கொட்டி பெரிய கற்கள், வேர்கள் முதலியவற்றை நீக்கி விட்டு நன்கு கலக்கி பரப்ப வே ண்டும். பரப்பிய மண்ணை நான்கு சம பாகங்களாக பிரி க்க வேண்டும். எதிர் எதிர் பாகங்களை நீக்கி விட்டு மீதம் உள்ள இரண்டு பாகங் களை ஒன்று சேர்த்து கலக்கி மறுபடியும் நான்கு பாகங்களாக பிரிக்க வேண்டும். முதல் தடவை நீக்கப்பட்ட பாகங்களை விட்டுவிட்டு மற்ற எதிர்பாகங்களை நீக்க வேண்டும். மீதம் உள்ள இரண்டு பாகங்களையும் ஒன்று சேர்த்து ஏற்கனவே செய்தது மாதிரி அரைகிலோ மண் இருக்கும் வரை செய்ய வேண்டும். மண் மாதிரியுடன் உழவரின் பெயர், கிராமம் மற்றும் முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிடப்பட்ட பயிரின் பெயர், அடுத்து

பயிரிடப்போகும் பயிரின் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய மண் மாதிரி விவரத்தாளையும், மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறியுள்ளார். களர், உவர் நிலத்திற்கு தனிதனி மாதிரி நெல், சோளம், கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ ஆழத்திலும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகள், மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும், தென்னை மற்றும் மரப்பயிர்களுக்கும் 90 செ.மீ ஆழத்திலும், பழ மரங்களுக்கு 150-180 செ.மீ ஆழம் வரையிலும் புல் வகை பயிர்களுக்கு 10 செ.மீ ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். களர், உவர் நிலங்களுக்கு தனித்தனியாக மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.

## திருச்செந்துறையில் நாளை வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : திருச்செந்துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் நடை பெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நாளை (செவ்வாய்) நடைபெறுகிறது. இந்த பொது ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் அன்று காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிகவளாகத்துக்கு கொ ண்டு வந்து பொது ஏலத்தில் பங்கே ற்குமாறு கேட்டுக்[a] காள்ளப்பட்டுள்ளது.

## சுத்தமல்லி, பருக்கல் ஊராட்சியில் 138 பேருக்கு இலவச வெள்ளாடு

அரியலூர்,: சுத்தமல்லி, பருக்கல் ஊராட்சியில் 138 பேருக்கு இலவச வெள்ளாடுகளை ஒன்றியக்குழுத்தலைவர் ஜெயசுதா வழங்கினார். அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சுத்தமல்லி ஊராட்சியில் தமிழக அரசின் இலவச வெள்ளாடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சுத்தமல்லி ஊராட்சி தலைவர் கன்மணி வரவேற்றார். ஒன்றியக்குழுத்தலைவர் ஜெயசுதா தலைமை வகித்து பயனாளிகளுக்கு இலவச வெள்ளாடுகளை வழங்கி பேசினார். இதையடுத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் சுத்தமல்லி ஊராட்சிக்கு 78 வெள்ளாடுகளும், பருக்கல் ஊராட்சியில் 60 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை தா.பழூர் கால்நடை உதவி மருத்துவர்கள் தா.பழூர் ஜெயந்தி, ஸ்ரீபுரந்தான் பிரசாத் மற்றும் கால்நடை ஆய்வாளர் அகிலன் ஆகியோர் செய்து இருந்தனர். முடிவில் பருக்கல் ஊராட்சிதலைவர் புகழேந்தி நன்றி கூறினார்.

## விதைநேர்த்தி பயிற்சி முகாம்

பாபநாசம், : பாபநாசம் விவேகானந்தா சமூக தொண்டு நிறுவனத்தை சேர்ந்த வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மையம் மற்றும் அம்மாப்பேட்டை வேளாண்மைத் துறை இணைந்து நெல்லில் விதை கடினப்படுத்துதல் மற்றும் விதை நேர்த்தி பயிற்சி முகாமை வடக்கு மாங்குடியில் நடத்தியது. வேளாண் திட்ட அலுவலர் வேல் முருகன், உதவி வேளாண் அலுவலர் சரவணன் தொழில்நுட்பம் குறித்து விளக்கினர். நேரடி நெல் விதைப்பு செய்யும்போது நெல்லில் ஆரம்பக் காலத்தில் வறட்சியை தாங்கும் தன்மையை ஏற்படுத்துவதற்கு விதைகளை கடினப் படுத்துதல் மிக அவசியம். இவ்வாறு கடினப் படுத்துவதால் விதைகளின் முளைப்புத் திறன் அதிகரித்து இளம் நாற்றுகள் வறட்சியைத் தாங்கி நன்றாக வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை

உருவாகும் என விளக்கப்பட்டது. முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## இலவச ஆடுகளுக்கு சிகிச்சை முகாம்

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ராயநல்லூர், பழையங் குடி, பனையூர், பூசலாங்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள் ளது. இந்த ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கும் முகாம் நேற்று 4 ஊராட்சிகளிலும் நடந்தது. கால்நடை மருத்துவர்கள் ராமலிங்கம், காவ்யா, சுரேந்திரன் ஆகியோர் ஆடுகளுக்கு குடல் புழுநீக்கம் சிகிச்சை அளித்தனர். சிகிச்சை முகாமை மன்னார்குடி கோட்ட கால் நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் லூர்து சாமி ஆய்வு செய்து பயனாளிகளிடம் ஆடு மற்றும் குட்டி கள் வளர்ச்சி குறித்து கேட்டறிந்தார். பின்னர் மருத்துவ குழுவினர் களுக்கும், பயனாளிகளுக்கும் அறிவுரை வழங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் ஏ.எஸ்.பாண்டி யன், சரோஜா, பன்னீர்செல்வம், லண்டன் குமார், கால்நடை ஆய்வாளர் முருகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாகை மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்: 7ம் தேதி வரை நடைபெறுகிறது

நாகை, :நாகை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நேற்று முதல் வரும் 7ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.நேற்று நாகை ஒன்றியம் மஞ்சக்கொல்லை, வடக்கு பொய்கை நல்லூர், நாகை நகராட்சியில் வார்டு எண் 1, பனங்குடி ஆகிய இடங்களிலும், திருமருகல் ஒன்றியத்தில் துறையூர், ஏனங்குடி, பனங்குடி, கங்களாஞ்சேரி, திருப்புகலூர் ஆகிய இடங்களிலும், கீழ்வேளூர் ஒன்றியத்தில் வெங்கிடாங்கால், வாழஒக்கூர், வலிவலம், 105 மணலூர் ஆகிய இடங்களிலும், கீழையூர் ஒன்றியத்தில் கருங்கன்னி, பாலக்குறிச்சி,

காரப்பிடாகை தெற்கு ஆகிய இடங்களிலும், தலைஞாயிறு ஒன்றியத்தில் மணக்குடி, விபிசி நகர், கள்ளிமேடு, நீர்மூளை ஆகிய இடங்களிலும், வேதாரண்யம் ஒன்றியத்தில் கத்திரிப்புலம், மூலக்கரை, தோப்புத்துறை, ஆறுகாட்டுத்துறை, கருப்பம்புலம், மயிலாடுதுறை ஒன்றியத்தில் மணல்மேடு, குத்தாலம் ஒன்றியத்தில் கோனேரிராஜபுரம், செம்பனார் கோவில் ஒன்றியத்தில் தலைச்சங்காடு, முடிகண்ட நல்லூர், சீர்காழி ஒன்றியத்தில் திருவெண்காடு, கொள்ளிடம் ஒன்றியத்தில் அகரஏலத்தூர் ஆகிய இடங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இன்று 2ம் தேதி திங்கட்கிழமை நாகை ஒன்றியம் பொரவச்சேரி, குறிச்சி, ஆய்மழை, நாகை நகராட்சி வார்டு எண் 1, 2, திருமருகல் ஒன்றியத்தில் ஏரவாஞ்சேரி, நாட்டார்மங்கலம், விற்குடி, ஏனங்குடி, பனங்குடி, தெற்கு வெளி, நெய்குன்னம், கீழ்வேளூர் ஒன்றியத்தில் ஒக்கூர், விளாம்பாக்கம், வலிவலம், 105 மாணலூர், தேவூர், கீழையூர் ஒன்றியத்தில் கருங்கன்னி, ஒட்டதட்டை, கீழப்பிடாகை, குண்டையூர், அரிதிடல், தலைஞாயிறு ஒன்றியம் கத்திரிப்புலம், தாணிக்கோட்டகம், அகஸ்தியன்பள்ளி, கருப்பம்புலம், மயிலாடுதுறை ஒன்றியம் கிழாய், கடலங்குடி, குத்தாலம் ஒன்றியம் பெருஞ்சேரி, சிவனார் அகரம், வானாதிராஜபுரம், செம்பனார்கோவில் ஒன்றியம் அன்னவாசல், கிடாரங்கொண் டான், சீர்காழி ஒன்றியம் ராதாநல்லூர், கொள்ளிடம் ஒன்றியம் மாதிரிவேலூர் ஆகிய இடங்களிலும் முகாம் நடக்கிறது. நாளை 3ம் தேதி (செவ்வாய்) நாகை ஒன்றியம் அகலங்கண், நாரணமங்கலம், சிக்கல், மூங்கில்குடி, திருப்பணிக்கோட்டூர், நாகை நகராட்சி வார்டு எண் 4, 5, 6, திருமருகல் ஒன்றியம் தேவங்குடி, மத்தியகுடி, குத்தாலம், ஏனங்குடி, வாழ்குடி, வவ்வாலடி, அம்மாபட்டம், பனங்குடி, கீழ்வேளூர் ஒன்றியம் கடம்பங்குடி, பொறகலாகுடி, ஆந்தகுடி, கீழையூர் ஒன்றியத்தில் கருங்கண்ணி, தன்னிலப்பாடி, காரப்பிடாகை, மகிழி, அரிதிடல், தெற்கு

தெரு, தலைஞாயிறு ஒன்றியம் வடுகூர், அய்யனார் கோவில் தெரு, நீர்மூளை, வேதாரண்யம் ஒன்றியம் கத்திரிப்புலம், தாணிக்கோட்டகம், கைலவனம்பேட்டை, கருப்பம்புலம், தேத்தாக்குடி தெற்கு, மயிலாடுதுறை ஒன்றியம் வரதம்பட்டு, திருச்சிற்றம்பலம், குத்தாலம் ஒன்றியம் பண்டாரவாடை, பேராவூர், குத்தாலம், செம்பனார்கோவில் ஒன்றியம் நத்தம், ஈச்சங்குடி, ஆக்கூர், கீழப்பெரும்பள்ளம், சீர்காழி ஒன்றியம் பெருந்தோட்டம், கொள்ளிடம் ஒன்றியம் எருக்கூரிலும் முகாம் நடக்கிறது. 4ம் தேதி நாகை ஒன்றியம் சிக்கல், கருவேலங்கடை, செட்டிச்சேரி, வடவூர், நிர்த்தனமங்கலம், தென்பாதி, நாகை நகராட்சி வார்டு எண் 7, 8, 9, 10, திருமருகல் ஒன்றியம் கரம்பை, வேலங்குடி, ஆதலையூர், ஆலத்தூர், ராராந்திமங்கலம், மேலப்பகுதி, அரசூர், கொத்தமங்கலம், கீழ்வேளூர் ஒன்றியம் வடகரை, வங்கராமாவடி, கோவில் கண்ணாப்பூர், ஆந்தக்குடி, தேவூர், கீழையூர் ஒன்றியத்தில் மீனம்பநல்லூர், மேலப்பிடாகை, வேப்பஞ்சேரி, சின்னத்தும்பூர், கருங்குடி, பெரியந்தோப்பு, திருவேலி, தென்பாதி, வேதாரண்யம் ஒன்றியத்தில் கரியாப்பட்டினம், வண்டு வாஞ்சேரி, வேம்பதேவன்காடு, ஆதனூ ர், தேத்தாக்குடி தெற்கு, மயிலாடுதுறை ஒன்றி யம் கடக்கம், பூதங்குடி, சோழம்பேட்டை, குத் தாலம் ஒன்றியத்தில் மங்கநல்லூர், பருத்திக்குடி, ஆலங்காடு, செம்பனார்கோவில் ஒன்றியத்தில், பாகசாலை, நரசிங்கநத்தம், செம்பனார்கோவில், முக்கரும்பூர், மேலப்பெரும்பள்ளம், சீர்காழி ஒன்றியத் தில் திருநகரி, கொள்ளிடம் ஒன்றியத்தில் வடரங்கம் ஆகிய இடங்களிலும் முகாம் நடக்கிறது. 5ம் தேதி நாகை ஒன்றியம் ஒரத்தூர், பாப்பாக்கோவில், நரியங்குடி, கருவேலி, நாகை நகராட்சி வார்டு எண் 11, திருமருகல் ஒன்றியம் நெய்குப்பை, ஆதலையூர், காரையூர், திருச்செங்காட்டான்குடி, கொத்தமங்கலம், கீழ் வேளூர் ஒன்றியம் கோகூர், தீதான்பேட்டை, கோவில்கண்ணாப்பூர், கிள்ளுக்குடி,

கீழையூர் ஒன்றியம் மீனம்பநல்லூர், சோழவித்யாபுரம், திருப்பூண்டி மேற்கு, அகரவெளி, சாத்துவபுரம் கடைவீதி, தலைஞாயிறு ஒன்றியம் வாட்டாக்குடி, கோவில்பத்து, புத்தூர், வேதாரண்யம் ஒன்றியம் கரியாப்பட்டினம், வண்டுவாஞ் சேரி, மறைஞாயநல்லூர், ஆதனூ ர், மயிலாடுதுறை ஒன்றி யம், கொற்கை, ஆத்தூர், திருமங்கலம், குத்தாலம் ஒன்றியம் கோடியமங்கலம், திருவாலங்காடு, கழனிவாசல், செம்பனார் கோவில் ஒன்றியம் சேமங்கலம், இலுப்பூர், பரசலூர், மாத்தூர், கீழையூர், சீர்காழி ஒன்றியம் சட்டநாதபுரம், கொள்ளிடம் ஒன்றியம் கோபால சமுத்திரம். 6ம் தேதி நாகை ஒன்றியம் ஆலங்குடி, கருவேலங்கடை, செட்டிச்சேரி, நாகை நக ராட்சி வார்டு எண் 11, திருமருகல் ஒன்றியம் மருங்கூர், புத்தகரம், சேஷமூலை, பில்லாளி, புதுக்கடை, தென்பிடாகை, கோபுராஜபுரம், கீழ்வேளூர் ஒன்றியம் ஆனைமங்கலம், ஓர்குடி, கொடியாலத்தூர், கிள்ளுக்குடி, படடமங்கலம், கீழையூர் ஒன்றியம் மீனம்பநல்லூர், திருமணங்குடி, சோழவித்யாபுரம், புதுப்பள்ளி, பெரிய வடக்கு வெளி, சின்ன வடக்கு வெளி, தலைஞாயிறு ஒன்றியம் வாட்டாக்குடி, கோவில்பத்து, வேதாரண்யம் ஒன்றியம் கரியாப்பட்டினம், வண்டுவாஞ்சேரி, முதலியார்தோப்பு, ஆதனூ ர், மயிலாடுதுறை ஒன்றியம் தாழஞ்சேரி, கேசிங்கண், பாண்டூர், குத்தாலம் ஒன்றியம் கருப்பூர், திருமணஞ்சேரி, அரிவளூர், செம்பனார்கோவில் ஒன்றியம் ஆலவேலி, கொத்தங்குடி, ஆறுபாதி, கிடங்கல், மாமாகுடி, சீர்காழி ஒன்றியம் விளந்திரசமுத்திரம், கொள்ளிடம் ஒன்றியம் புத்தூர் ஆகிய இடங்களிலும், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. 7ம் தேதி, நாகை ஒன்றியம் அகரஒரத்தூர், தெற்கு பொய்கை நல்லூர், அந்தணப்பேட்டை, நாகை நகராட்சி வார்டு எண் 12, திருமருகல் ஒன்றியம் காராமணி தெரு, பண்டாரவாடை, கோபுராஜபுரம், கீழ்வேளூர் ஒன்றியம் கூரத்தாங்குடி, வடக்காலத்தூர், கீழையூர் ஒன்றியம்

மீனம்பநல்லூர், தலைஞாயிறு ஒன்றியம் கோவில்பத்து, வேதாரண்யம் ஒன்றியம் வடமழை ரஸ்தா, கடிநெல்வயல், பிராந்தியக்கரை, மயிலாடுதுறை ஒன்றியம் நமச்சிவாயபுரம், அருள்மொழிதேவன், குத்தாலம் ஒன்றியம் காஞ்சிவாய், மாதிரிமங்கலம், கிளியனூ ர், பழையகூடலூர், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் கஞ்சாநகரம், திருவிளையாட் டம், திருச்சம்பள்ளி, காலகஸ்தினாபுரம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி, திருப்புங்கூர், தென்னாம்பட்டினம், கொள்ளிடம் ஒன்றியம் குன்னம் ஆகிய இடங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. இவ்வாறு கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். பள்ளிகளில்

## <u>கொடைக்கானலில் கேரட் சாகுபடி பரப்பு அதிகரிப்பு</u>

திண்டுக்கல், : கொடைக்கானல் வட்டத்தில் 515 ஹெக்டேர் பரப்பளவில் கேரட் பயிரிடப்பட்டு உள்ளது. இது கடந்த ஆண்டின் ஜனவரி மாத கேரட் சாகுபடி பரப்பை விட அதிகமாகும் என்று வேளாண் வணிகத்துறை தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் கேரட் நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் கேரட்டிற்கு நுகர்வோர் மத்தியில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தளவில் குறிப்பாக கொடைக்கானல் வட்டத்தில் 515 ஹெக்டேர் கேரட் பயிரிடப்படுகிறது. இது கடந்த ஆண்டின் ஜனவரி மாத கேரட் சாகுபடி பரப்பை விட அதிகமாகும். விலை விபர ஆய்வின்படி பொதுவாக கேரட்டின் விலை ஜூலை முதல் அக்டோபர் மாதம் வரை அதிகமாக இருக்கும். விலை விபர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவின்படி கேரட்டின் விலை வரும் மே-ஜூன் மாதங்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும் கேரட்டின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15 முதல் ரூ.20 வரை இருக்கும் என கணிக்கப்பட்டு உள்ளது.

இதனடிப்படையில் கேரட் சாகுபடி முடிவுகளை மார்ச்,ஏப்ரலில் விவசாயிகள் மேற்கொள்ளலாம் என்று மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## தேனியில் 3 மணி நேரம் கனமழை

தேனி, : தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகலில் கடும் வெயில் வாட்டி வருகிறது. அதிகாலை நேரத்தில் கடும் பனிப்பொழிவு இருந்து வருகிறது. சமச்சீரற்ற சீதோஷ்ண நிலையால் தேனி மாவட்டத் தில் குழந்தைகள் உள்ளிட்டோருக்கு காய்ச்சல் பரவி உள்ளது. தேனியில் கடந்த இரு நாட்களாக வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருந்தது. நேற்று காலை 9 மணி முதலே வெயில் கொடுமை அதிகரித்தது. இந்நிலையில் நேற்று மாலை திடீரென கனமழை கொட்டியது. இம்மழை மாலை 5.30 மணிக்கு தொடங்கி தொடர்ந்து 3 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்தது. இதனால், நேரு சிலை அருகே மதுரை ரோட்டில் மழை நீர் தேங்கியது. இதில் சுமார் 1.5 அடி உயரத்திற்கு நீர் தேங்கியதால், இப்பகுதியில் சென்ற டூவீலர்கள் மெதுவாக சென்றன. கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கத்தால் அவதிப்பட்டு வந்த தேனி நகர மக்களுக்கு நேற்றைய மழையானது குளிர்ச்சியை ஏற்படுத்தியது. இதேபோல தேனி மாவட்டத்தில் பல இடங்களிலும் மழை பரவலாக பெய்தது.

## இடைத்தரகர்கள் இன்றி கூடுதல் விலைக்கு விற்கலாம்

விருதுநகர்,:மக்காச்சோளத்தை இடைதரகர்கள் இன்றி நேரடியாக அதிக விலைக்கு விற்று பயன்பெறலாம் என வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.மாவட்டத்தில் மக்காச்சோளம் இறவை மற்றும் மானாவாரியில் பயிரிடப் பட்டு தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்க விரும்பினால் ராசபாளையம், சாத்தூர், விருதுநகர், அருப்புக் கோட்டையில் உள்ள ஒருங்குமுறை விற்பனை கூடங்களில் இருப்பு

வைக்கலாம். விவசாயிகள் தங்களது உடனடி பணத்தேவைக்கு இருப்பு வைக்கும் மக்காச் சோள மதிப்பில் 50 சதவீதம் கடனாக பெற்றுக் கொள்ளலாம். இதற்கு 5 சதவீத வட்டி வசூலிக்கப்படும். முதல் 15 நாட்களுக்கு வட்டி கிடையாது. மக்காச்சோளத்தை விற்பனை செய் ய விரும்பு வோர் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணித் துறை மூலம் விவசாயிக ளால் நடத்தப்படும் "காரியாபட்டி சிறுதானிய விவ சாய உற்பத்தியாளர்கள் கம்பெனி லிட்"டை நேர டியாக தொடர்கொண்டு இடைதரகு இன்றி விற்று பயன்பெறலாம். மக்சோளத் தை தரகு இன்றி விற்பனை செய்ய விவசாய உற்பத்தியாளர்கள் கம்பெனி இயக்குநரை 8678919724 எண் ணில் தொடர்பு கொள்ள லாம்.

## <u>மஞ்சூர் பகுதிகளில் பலத்த மழை</u>

மஞ்சூர், : மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் பெய்த பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த பல மாதங்களாக மழை அறவே பெய்யவில்லை. இதனால் கடும் வறட்சி நிலவி வருகிறது. வறட்சியின் தாக்கத்தால் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளின் தேயிலை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும், கடந்த நவம்பரில் துவங்கிய பனிபொழிவு 4 மாதங்களுக்கும் மேலாக நீடித்து வருகிறது. அடிக்கடி உறைபனியும் கொட்டுவதால் வறட்சியின் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. தொட ர்ந்து பல மாதங்களுக்கும் மேலாக மழையின்மை, பனி மற்றும் உறைபனியின் தாக்குதல், பகல் நேரங்களில் சமவெளி பகுதிகளை போல் சுட்டெரிக்கும் வெ யில் போன்ற காரணங்க ளால் மஞ்சூர் சுற்றுபுறங்களில் தேயிலை தோட்டங்களில் செடிகள் கருகின. மலை காய்கறிகள் விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டது. தொடர்ந்து நீடித்த வறட்சியால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பல்வேறு பாதிப்புகளுக்குள்ளானார்கள். மேலும் வறட்சியின் காரணமாக மஞ்சூரை சுற்றிலும் வனப்பகுதிகளில் மரங்கள், செடி, கொடிகள் தாவரங்கள், புல்வெளிகள் அனைத்தும் காய்ந்து கருகிப் போனது.

ஆறுகள், சிற்றோடைகள் வறண்டதால் மின்சார உற்பத்திக்கு நீர் ஆதாரமாக உள்ள அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு, குந்தா, கெத்தை உள்ளிட்ட அனைத்து அணைகளிலும் நீர்மட்டம் வெகுவாக குறைந்து போனது. இந்நிலையில், நேற்று முன்தினம் சீதோஷண நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டதையடுத்து மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் திடீரென மழை பெய்ய துவங்கியது. தொடர்ந்து இடி, மின்னலுடன் சுமார் இரண்டு மணிநேரம் பலத்த மழை கொட்டியது. இதனால் சாலைகளில் மழை வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்தோடியது. நீண்ட இடைவெளிக்கு பின்னர் பரவலாக பெய்த பலத்த மழையால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியான காலநிலை ஏற்பட்டது. மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் கடுமையான வறட்சிக்கிடையே எதிர்பாராமல் பெய்த பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>முதல் முறையாக வயல் வெளியில் நேரடி மக்காச்சோளம் விற்பனை விவசாயிகள் ஆர்வலர் குழு ஏற்பாடு</u>

திருச்சி, : விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் முதல் முறையாக வயல் வெளியில் நேரடி மக்கா சோளம் விற்பனை செய்யப்பட்டது. முசிறி, தொட்டியம் வட்டாரங்களில் விவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் எம். களத்தூர் கிராமத்தில் மக்காச்சோளம் சாகுபடி அறு வடை செய்து வைத்திருந்த விவசாயி குமார் என்பவரி டம் 7,100 கிலோ மக்காசோளம், வியாபாரி செந்தில்குமாரிடம் ஒரு கிலோ ரூ.12 என விற்பனை செய்யப்பட்டது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் மூலம் நேரடியாக வயல் வெளிகளுக்கு வியாபாரிகளை அழைத்து வந்து விற்பனை க்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் மொத்தம் ரூ.85,200க்கு வயல் வெளி யிலே விவசாயிக்கு வழங்கப் பட்டது. இது குறித்து வேளாண் வணிகம் துணை இயக்கு னர் சந்திரசேகரன் கூறுகை யில், இந்த நேரடி வியாபாரி, விவசாயி விற்பனை பரிமாற்றத்திற்கு தொட்டியம் வேளாண் வணிகம் உதவிஅலுவலர்கள்

சரவணக்குமார், புஷ்பா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். எம்.களத் தூர் விவசாயிகள் ஆர்வலர் குழு அமைக்கப்பட்டு இதன் மூலம் முதன் முறையாக வயல் வெளியில் நேரடியாக மக்காச்சோளம் விற்பனை செய்யப் பட்டன என தெரிவித்தார்.

## திருச்செந்துறையில் நாளை வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : திருச்செந் துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் நடை பெறு கிறது. திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறை யில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நாளை (செவ்வாய்) நடைபெறுகிறது. இந்த பொது ஏலத் தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்கு டன் பணமும் பட்டு வாடா செய்யப்படுகிறது. வாழைத் தார் கொண்டு வரும் விவசாயிகள் அன்று காலை 11 மணிக்குள் முன் பதிவு செய்ய வேண்டும்.திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால் குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டி யம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயி கள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார் களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிகவளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## துறையூரில் 4ம்தேதி பருத்தி ஏலம்

திருச்சி, : அறு வடை தொடங்கியிருப்ப தால் துறையூரில் 4ம்தேதி பருத்தி மறைமுக ஏலம் நடை பெறுகிறது. திருச்சி அடுத்த துறை யூர் ஒழுங்குமுறை விற் பனைக் கூடத்தில் கடந்த வருடம் முதல் பருத்தி மறைமுக ஏலம் தொடங்கப்பட்டது. இதேபோல் இவ்வருடம் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் ஒவ் வொரு வாரமும் புதன்கிழமை தோறும் துறையூ ரில் மறைமுக ஏலம் நடை பெற்று வருகிறது. இதேபோல் இந்த வாரம் 4ம்தேதி (புதன்) நடைபெறும் மறைமுக ஏலத்தில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர்

வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள், துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வந்து, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெற்று பயன் பெற லாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டுப்புத்தூரில் இயற்கை வேளாண் விழிப்புணர்வு முகாம் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

தொட்டியம், : காட்டுப்புத்தூரில் இயற்கை வேளாண் விழிப்புணர்வு மற்றும் போக்குவரத்து சாலை விதிகள் குறித்த முகாம் நடந்தது. கயிறு இழுக் கும் போட்டியில் வென்ற விவசாயிகளுக்கு வேளாண் கருவி கள் வழங்கப்பட்டன. தொட்டியம் தாலுகா, காட்டுப்புத்தூர் பஸ் நிலைய வளாகத்தில் நியூ கிரியேட்டிவ் பிரி டம்ஸ் இன்டியன்ஸ் அமைப்பு சார்பில் விவசாயிகளுக்கான இயற்கை வேளாண் குறித்த முகாம் நடைபெற்றது. முகா மிற்கு அமைப்பின் சேர்மன் கரு ணாகரன் தலைமை வகித்தார். திருச்சி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தியாகராஜன், லயன்ஸ் கிளப் வேலுசாமி, அதிமுக ஒன்றிய தலைவர் பழனிவேலன், காட்டுப்புத்தூர் பேருராட்சி தலைவர் பரமேஸ் வரி ராமசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை சேர்மன் குணா வரவேற்றார். சென்னை அண்னை வயல் பவுன்டர் மதன் கலந்து கொண்டு இயற்கை முறை விவ சாயம் குறித்து பேசினார். முன் னதாக போக்குவரத்து சாலை விதிகளை பின்பற்றும் விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் துண்டு பிரசுரங் கள் வழங்கப்பட்டன. தொடர் ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு கயிறு இழுக்கும் போட்டி நடந்தது. போட்டியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளின் அணி கள் கலந்துகொண்டன. போட் டியில் முதலிடத்தில் சீலைப்பிள்ளையார் புத்தூர் விவசாயி அணி வெற்றி பெற்றனர். இதில் முதல் பரிசாக ரூ.11,947 மதிப்புள்ள விவசாய பொருட்களும், 2வது இடம் பெற்ற காட்டுப்புத்தூர் விவசாயிகள் அணிக்கு ரூ.9,947 மதிப்புள்ள விவசாய கருவிகளும், 3ம் இடம் பிடித்த ஸ்ரீராசமுத்திர அணிக்கு ரூ.7,947

மதிப்புள்ள விவசாய கருவிகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து விவசாயிகளுக் கான கயிறு இழுக்கும் போட் டியில் வென்றவர்களுக்கு செம்மரக்கன்றுகள் வழங்கப்பட் டன. நிறைவாக அமைப்பின் செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.